2021 செப்டம்பர் 6] *[திரு. சு. முத்துசாமி]*

வேண்டுகோளையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) 2017-2018 ஆம் ஆண்டு +2 பயின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி மற்றும் திரு. மா. சின்னதுரை ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். முன் வரிசையில் இருக்கும் நீங்கள் இரண்டு பேரும் மிக அழகாகக் கேட்பீர்கள். சுருக்கமாகக் கேளுங்கள்.*

***திரு. வி.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த ஆட்சியில் 2017–2018 ஆம் ஆண்டு +2 மாணவர்களுக்கு* Laptop *வழங்கப்படவில்லை. இம்மாணவர்களுக்கு* Laptop *வழங்கப்படும் என நமது தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் இடம் பெற்றுள்ளது. அதை உடன் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, புத்தகப் பையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் புகைப்படம் அப்படியே இருக்க வேண்டும் என்று சொன்ன அதே முதலமைச்சர்தான், 14 ஆண்டுகளுக்குப் பிறகு நல்லாசிரியர் விருது சான்றிதழில் முதல்வர் அவர்களுடைய படம் இருக்கக்கூடாது என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று 389 ஆசிரியர் பெருமக்களுக்கு நற்சான்றிதழ்களை நாங்கள் பெருமையோடு வழங்கியிருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கவன ஈர்ப்பு தொடர்பான விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையில் வைக்கப்பட்டுள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பின்கீழ் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2021 செப்டம்பர் 6

அறிக்கை

மாணவர்களிடையே கணினி அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, அரசு/அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்க, தமிழக அரசால் முடிவு செய்து, அதனடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 1 சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் 3—6—2011-ன்படி, மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் இத்திட்டம் 2011—2012 ஆம் கல்வியாண்டு முதல் தற்போது வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2. 2011—2012 முதல் 2019–2020 ஆம் கல்வியாண்டு முடிய இத்திட்டத்தின்கீழ் 45,71,675 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ.6,349.63 கோடி ஆகும்.

3. அரசாணை எண் 9, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் 4–7–2018–ல், 2018–2019 ஆம் கல்வியாண்டு முதல் 11 ஆம் வகுப்பு பயிலும்போதே மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலும், அரசாணை (நிலை) எண் 3, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் 14—6—2019-ன்படி முதலாவதாக 2019–2020 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும், இரண்டாவதாக 2019—2020 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும், மூன்றாவதாக 2018–2019 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கும், நான்காவதாக 2017—2018 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கும் என்ற முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், அரசாணை (நிலை) எண் 9, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் 1—11—2019-ன்படி மூன்றாவது மற்றும் நான்காவது நிலையில் உள்ள 2018–2019 மற்றும் 2017–2018 ஆம் ஆண்டுகளில் 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களில் உயர் கல்வியினைத் தொடர்ந்து பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கப்பெற வேண்டும் எனவும், உயர் கல்வி தொடராத மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. இதனடிப்படையில் 2017–2018 ஆம் கல்வியாண்டு 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களில், சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், சேலம், தேனி ஆகிய எட்டு மாவட்டங்களில் பயின்ற மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் முழுமையாக வழங்கப்பட்டுவிட்டன. மற்ற மாவட்டங்களில் பயின்ற மாணவர்களில் தற்போது உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, அவர்கள் பயிலும், கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் அத்தாட்சி சான்றின் (Bonafide Certificate) அடிப்படையில், மாணவர்களுக்கு வழங்குவதற்கு, அரசாணை (நிலை) எண் 2, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நாள் 18–2–2021-ன்படி நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7. 2020–2021 ஆம் கல்வி ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற 4,97,028 மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மடிக்கணினிகள் இன்னமும் வழங்கப்படவில்லை. தற்போது 2021–2022 ஆம் கல்வி ஆண்டில் 11 ஆம் வகுப்பு பயின்று வரும் தோராயமாக 5,00,000 மாணவர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்க வேண்டியுள்ளன. இது மட்டுமல்லாமல், 2017–2018 ஆம் கல்வி ஆண்டில் வழங்கப்பட வேண்டிய நிலுவை 1,75,789 என மொத்தம் 11,72,817 மடிக்கணினிகள் வழங்க வேண்டியுள்ளன.

8. தற்போது இந்த அனைத்து நிலுவைப் பணிகளையும் முடிப்பதற்கு நிருவாக அனுமதி வழங்க பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. படிப்படியாக அனைத்து மாணவர்களுக்கும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையில் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதற்கான அனைத்து நிலுவைப் பணிகளையும் முடிப்பதற்கு நிருவாக அனுமதி வழங்க, பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன எனவும், படிப்படியாக அனைத்து மாணவர்களுக்கும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பை வரவேற்கிறேன். அதே

நேரத்தில், இனி வருங்காலங்களில் கல்வி ஆண்டு தொடங்கும் காலத்திலேயே இதனை வழங்கினால், மாணவர்களுக்கு உதவிகரமாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–35

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்த்தேன் என்று சொன்ன மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய நன்றி. குறிப்பாக, இந்த விவர அறிக்கையில்* short *ஆக சொல்ல வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக ஒவ்வோர் ஆண்டும் எப்படிப்பட்ட அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன போன்றவை இடம் பெற்றுள்ளன. முதலில், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டும் என்கின்ற ஒரு நிலை இருந்தது. பிறகு 2018-2019 ஆம் ஆண்டு முதல் அது 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற நிலை வந்தது. அதிலிருந்து ஆரம்பித்தால்தான் சரியான நேரத்திற்கு அந்த மடிக்கணினி அவர்களுக்குச் சென்று சேரும் என்றுகூட அந்த அரசாணையில் இருக்கின்றது. இதுவரைக்கும் 45,71,675 மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6,349.63 கோடி ரூபாய் இதற்காக செலவிடப்பட்டிருக்கின்றது. கடந்த 2 வருடங்கள் கொரோனா காலமாக இருந்ததால், 1,75,789 மடிக்கணினி வழங்குவது நிலுவையில் இருக்கின்றது. மேலும், தோராயமாக 5 இலட்சம் மடிக்கணினிகள் +1 மாணவர்களுக்கு இந்த ஆண்டு வழங்க வேண்டியுள்ளது. அதேபோன்று, பழைய நிலுவை இனங்கள் என்றால், 11,72,817 மடிக்கணினிகள் வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல்,* in advance basis, *அதாவது கல்வி ஆண்டு ஆரம்பிக்கப்போகிறதென்றால், 6 மாதங்களுக்கு முன்பே அதற்கான திட்டங்கள் அனைத்தையும் வகுத்து, உரிய நேரத்தில் அந்தப் பள்ளி மாணவர்களுக்கு அவை சென்று சேருகின்றவகையில் கட்டாயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2021 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நல்ல பதில் கிடைத்திருக்கிறது, நன்றி சொல்லிவிட்டு அப்படியே அமருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.*

6. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*